**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**கிருஷ்ணராயபுரம்.**

**<u>முன்னிலை</u> : திரு.ஆர்.பாக்கியராஜ், பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கிருஷ்ணராயபுரம்.**

2025 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 15–ம் நாள் செவ்வாய்க்கிழமை

**<u>இடைக்கால மனு எண். 4/2025</u>**

**<u>in</u>**

**<u>அசல் வழக்கு எண். 4/2024</u>**

மகாலிங்கம் .... மனுதாரர்/வாதி

**//எதிர்//**

ரெங்கசாமி ....எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இளங்கோவன் .... எதிர்மனுதாரர்/2ம் வாதியாக சேர்க்கப்பட வேண்டிய நபர்

இந்த மனு, 10.07.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. M.செல்வக்குமார், அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.கார்த்திக்கேயன், 2ம் வாதியாக சேர்க்கப்பட வேண்டிய நபருக்கு அறிவிப்பு அனுப்பி யாரும் ஆஜராகவில்லை. இருதரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**<u>உத்தரவு</u>**

இந்த மனு மனுதாரர்/வாதியால் உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 1 விதி 10 (2) பிரிவு 151 ன் கீழ் இளங்கோவன் என்பவரை அசல் வழக்கில் 2ம் வாதியாக சேர்க்க தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2) மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்:–</u>**

மனுதாரர்/வாதி, எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது தாவா சொத்துக்களைப் பொறுத்து இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு

நிலுவையில் இருக்கும்போதும் வழக்கு சொத்தை வாதி கடந்த 10.05.2024 மற்றும் 13.06.2024 ஆகிய தேதிகளில் 2ம் வாதியாக சேர்க்கப்படும் நபரான இளங்கோவன் என்பவருக்கு கிருஷ்ணராயபுரம் சார்பதிவக அலுவலக ஆவண எண்கள் முறையே 1676/2024 மற்றும் 2112/2024 மூலம் விற்பனை செய்துள்ளார். தாவா சொத்தை கிரையம் பெற்ற இளங்கோவன் என்பவருக்கு பிரதிவாதிகளால் இடையூறு ஏற்பட்டுவிட கூடாது என்பதால் வாதி வழக்கை தொடர்ந்து நடத்தி வருகிறார். கிரையம் பெற்ற இளங்கோவன் இவ்வழக்கிற்கு அவசிய தரப்பினர் ஆவார். இளங்கோவன் பெயரில் தாவா சொத்துக்களை பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அவரை வழக்கில் 2ம் வாதியாக சேர்த்தால் பிரதிவாதிக்கு எந்த இழப்பும் ஏற்படாது. அதனால் இளங்கோவன் என்பவரை அசல் வழக்கில் 2ம் வாதியாக சேர்க்க வேண்டும்.

3) <u>எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த எதிருரை :-</u>

எதிர்மனு உரையில், குறிப்பாக ஒப்புக்கொள்ளும் சங்கதியை தவிர மற்றைய அனைத்து சங்கதிகளையும் எதிர்மனுதாரர் மறுக்கிறார். மனு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல. மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். மனுதாரர்/வாதி பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 2ல் சொல்லியுள்ள விவரங்கள் உண்மைக்கு புறம்பானதாகும். வாதி தாவா சொத்துக்களை 2ம் வாதியாக சேர்க்கப்பட வேண்டிய நபரான இளங்கோவன் என்பவருக்கு விற்பனை செய்ததாகவும், பிரதிவாதியால் இடையூறு ஏற்பட்டு விட கூடாது என்பதற்காக வழக்கை தொடர்ந்து நடத்துவதாகவும் கூறியுள்ள சங்கதி உண்மைக்கு புறம்பானது தவறானதாகும். மேற்படி, இளங்கோவன் என்பவர் வழக்கிற்கு அவசிய தரப்பினர் என்பது உண்மைக்கு புறம்பானதாகும். தாவா சொத்துக்களுக்கு இளங்கோவன் பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டதாக சொல்வது உண்மைக்கு புறம்பானதாகும்.

4) உண்மையில், வாதியும் இளங்கோவனும் நெருங்கிய உறவினர்கள். இருவரும் சேர்ந்து பொய்யான வழக்கையும் பிரதிவாதியை கஷ்டப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் தாக்கல் செய்துள்ளார். அவ்வழக்கு ஆவணங்கள் உருவாக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லை. இம்மனுவிற்கு உண்டான காரணங்களும் சரியாக குறிப்பிடவில்லை. ஒரு வழக்கிற்கு இரண்டு வழக்கு மூலம் ஏற்பட வாய்ப்பு இல்லை. அதனால் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

5) இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியம் முன்னிலைப்படுத்தப்படவில்லை. இரு தரப்பிலும் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6) இந்த மனுவில் **தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால், அசல் வழக்கின் 2ம் வாதியாக திரு.இளங்கோவன் என்பவரை சேர்க்க வேண்டுமா? இல்லையா?** என்பதே ஆகும்.

7) இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசிலினை செய்யப்பட்டது.

8) மனுதாரர்/வாதி தரப்பில் வாதிட்ட கற்றிந்த வழக்கறிஞர் தனது வாதத்தின் வழக்கு நிலுவையில் இருக்கும்போது வழக்குரையில் குறிப்பிட்டுள்ள தாவா சொத்தை இளங்கோவன் என்பவருக்கு விற்பனை செய்துள்ளார். மேற்படி, இளங்கோவன் வழக்கிற்கு அவசிய தரப்பினர் ஆவார். அதனால் 2ம் வாதியாக சேர்க்க வேண்டும் என்று வாதிட்டார்.

9) எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில், வாதியின், இளங்கோவன் என்பவரும் நண்பர்கள் என்றும், இருவரும் சேர்ந்து பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், பிரதிவாதிக்கு தொந்தரவு செய்வதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், விற்பனை செய்ததாக சொல்லப்படுவதற்கு கிரையப்பத்திரத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும், பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டதாக சொல்லப்படுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும், அதனால் மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் வாதிட்டார்.

10) 2ம் வாதியாக சேர்க்கப்பட வேண்டிய நபரான இளங்கோவன் என்பவருக்கு நீதிமன்றம் மூலம் அறிவிப்பு அனுப்பப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கவில்லை.

11) இந்த வழக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி தாக்கல்

செய்யப்பட்டிருந்தாலும், வழக்கு நிலுவையில் இருக்கும்போது வழக்குரை தாவா சொத்தை உரிமம் மாற்றம் செய்திருப்பதால் தரப்பினராக சேர்க்கப்படவேண்டிய நபர் இவ்வழக்கிற்கு அவசிய தரப்பினர் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. அவரை இந்த வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் பல வழக்குகள் தாக்கல் செய்ய கூடும் சூழ்நிலை ஏற்படும். பல வழக்குகள் ஏற்படுவதை (MultipleCityof Proceedings) தடுப்பதற்காக தரப்பினராக சேர்க்க கோரிய நபரை அசல் வழக்கின் சேர்ப்பது தான் நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும், தரப்பினராக சேர்க்க கோரிய நபரை அசல் வழக்கை சேர்ப்பதால் வாதிக்கோ, பிரதிவாதிகளுக்கோ எந்தவித இழப்பும் ஏற்படாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

12) இந்நீதிமன்றம் பார்வையிட்ட மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்ற மதுரை கிளை முன்தீர்ப்பான, Karuppaiyan Vs Sudhakar and others, C.R.P.(MD) No.696/2023 கடந்த 10.12.2023 அன்று வழங்கப்பட்ட முன்தீர்ப்பில் வழக்கு நிலுவையில் இருக்கும்போது சொத்தை வாங்கிய நபரை பல வழக்குகள் எழுவரை தடுப்பதற்காக ஒரு தரப்பினராக சேர்க்கலாம் என்று கூறப்பட்டுள்ளது. அசல் வழக்கு இடையூறு செய்வதற்காக நிரந்தர உறுத்துக்கட்டளை மட்டும் கோரி தாக்கல் செய்யப்பட்டிருந்தாலும், வழக்கு நிலுவையில் இருக்கும்போது வழக்குரை சொத்தை மாற்றம் செய்திருப்பதால் தரப்பினராக சேர்க்கப்படவேண்டிய நபர் இவ்வழக்கிற்கு அவசிய தரப்பினர் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. அவரை இந்த வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் பல வழக்குகள் தாக்கல் செய்ய கூடும் சூழ்நிலை ஏற்படும். பல வழக்குகள் ஏற்படுவதை (MultipleCityof Proceedings) தடுப்பதற்காக தரப்பினராக சேர்க்க கோரிய நபரை அசல் வழக்கின் சேர்ப்பது தான் நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. இந்த வழக்கில் வாதியே தரப்பினராக சேர்க்க மனு செய்துள்ளார் ஒரு வழக்கில் யாரை சேர்க்க வேண்டுமென்று வாதி தான் முடிவு செய்ய வேண்டும். வாதி வழக்கின் மாஸ்டர் (Domins Litis) ஆவார். மேற்கண்ட காரணங்களால் இந்த மனு அனுமதிக்க தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது

இறுதியாக, இந்த மனு அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்/வாதி அசல் வழக்குரையில், திரு.இளங்கோவன் என்பவரை 2ம் வாதியாக சேர்க்க

உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025 ம் ஆண்டு ஜுலை 15 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

RAMAIYAH BAGYARAJ Digitally signed by RAMAIYAH BAGYARAJ Date: 2025.07.19 13:08:47 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்**
**கிருஷ்ணராயபுரம்.**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>** – இல்லை.

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>** – இல்லை.

RAMAIYAH BAGYARAJ Digitally signed by RAMAIYAH BAGYARAJ Date: 2025.07.19 13:08:50 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்**
**கிருஷ்ணராயபுரம்.**